## STATE LEVEL BANKERS' COMMITTEE TAMIL NADU
## Convenor : Indian Overseas Bank

**அடல் ஓய்வூதிய திட்டம் - அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்**

1. **ஓய்வூதியம் என்றால் என்ன ? அதை ஏன் நான் பெற வேண்டும் ?**

ஓய்வூதியம் என்பது மக்கள் வேலை செய்ய இயலாத போது மாதந்திர வருமானம் பெறுவதைப் போன்றதாகும்.

**ஓய்வூதியத்தின் தேவைகள்** :

- அதிக வயதின் காரணமாக குறைந்த ஊதியம் பெறுதல்
- சம்பாதிக்கும் குடும்ப உறுப்பினர் தனிக்குடித்தனம் செல்லுதல்
- அன்றாட வாழும் செலவு அதிகரித்தல்
- சராசரி வாழ் நாள் அதிகரித்தல்

உறுதி செய்யப்பட மாதாந்திர வருமானத்தின் மூலம் கண்ணியமான வாழ்க்கை வாழலாம்.

2. **அடல் ஓய்வூதிய திட்டம் என்றால் என்ன ?**

இந்தியாவில் உள்ள அனைத்துக் குடிமக்கள், குறிப்பாக எந்த ஒரு ஓய்வூதிய தொகை பெறாமல் இருக்கும் முறை சாரா தொழிலாளர்கள்.இத்தகைய தொழிலாளர்கள் தங்கள் விரும்பிய ஓய்வூதிய தொகையை பெற ஊக்குவிக்கிறது.

இத்திட்டத்தின் கீழ் 60 வயது ஆன சந்தாதாரர்கள் மாதாந்திர பங்களிப்பு தொகையைப் பொறுத்து உத்திரவாதமான ஓய்வூதியமாக மாதம் தோறும் ரூ 1000/-, ரூ 2000/-, ரூ 3000/-, ரூ 4000/-, ரூ 5000/- வரை பெறலாம்

3. **APY திட்டத்தில் யார் சேரலாம் ?**

எந்த ஒரு இந்திய குடிமகனும் இத் திட்டத்தின் கீழ் சேரலாம்.

**இத் திட்டத்தின் கீழ் சேர்வதற்கான தகுதிகள் பின்வருமாறு**

i. சந்தாதாரரின் வயது 18 முதல் 40 வயதிற்குள் இருக்க வேண்டும்

ii. சந்தாதாரர் கண்டிப்பாக வங்கிக் கணக்கு வைத்திருக்க வேண்டும்

iii. விண்ணப்பதாரர் கைப்பேசி (மொபைல் ) எண் வைத்திருக்க வேண்டும். அவரின் மொபைல் எண் குறித்த விவரங்கள் APY திட்டத்தின் கீழ் இணையும் போது வங்கிக்கு அளிக்க வேண்டும்.

- ஜூன் 1 2015 முதல் 31 டிசம்பர் 2015 வரை APY திட்டத்தின் கீழ் சேரும் சந்தாதார்களுக்கு அரசாங்கத்தின் இணை பங்களிப்பு 5 வருடங்களுக்கு இருக்கும் (அதாவது 2015-16 முதல் 2019-20 வரை). பிற சட்டபூர்வ சமூகப் பாதுகாப்பு திட்டத்தின் பயனாளிகள் மற்றும் வருமான வரி செலுத்தும் நபர்களுக்கு இது பொருந்தாது..

4. **வேறு எந்த சமூகப் பாதுகாப்பு திட்டங்களின் பயனாளிகளுக்கு APY கீழ் அரசு இணை பங்களிப்பு பெற தகுதி இல்லை ?**

பிற சமூகப் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் உதவி பெறும் பயனாளிகளுக்கு APY திட்டத்தின் கீழ் அரசு இணை பங்களிப்பு பெற தகுதி இல்லை. உதாரணமாக பின் வரும் சட்டங்களின் சமூகப் பாதுகாப்பு திட்டங்களின் உறுப்பினர்களுக்கு அரசு இணை பங்களிப்பு பெற தகுதி இல்லை.

i. ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் பிற வசதிகள் சட்டம், 1952
ii. நிலக்கரி சுரங்கங்கள் சேமலாப நிதி மற்றும் பிற வசதிகள் சட்டம், 1948
iii. கடல் மாலுமிகள் சகாய நிதியச் சட்டம், 1966
iv. அசாம் தேயிலை தோட்டங்கள் சேமலாப நிதி மற்றும் ஓய்வூதிய நிதித் திட்டம் சட்டம் 1955
v. ஜம்மு காஷ்மீர் ஊழியர் சேமலாப நிதியச் சட்டம், 1961.
vi. பிற சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் பணம் பெறும் பயனாளிகள்

**5. APY திட்டத்தின் கீழ் எவ்வளவு ஓய்வூதியம் கிடக்கும் ?**

இத்திட்டத்தின் கீழ் 60 வயது ஆன சந்தாதாரர்கள் மாதாந்திர பங்களிப்பு தொகையைப் பொறுத்து உத்திரவாதமான ஓய்வூதியமாக மாதம் தோறும் ரூ 1000/-, ரூ 2000/-, ரூ 3000/-, ரூ 4000/-, ரூ 5000/- வரை பெறலாம்

**6. APY** திட்டத்தின் நன்மைகள்

ஜூன் 1 2015 முதல் 31 டிசம்பர் 2015 வரை APY திட்டத்தின் கீழ் சேரும் சந்தாதார்களுக்கு, அவர்கள் ஆண்டில் செலுத்தும் பங்களிப்பின் 50 விழுக்காடு அல்லது ரூ 1000 இவற்றில் எது குறைவோ அந்தத் தொகையை அரசாங்கம் முதல் ஐந்து ஆண்டுகளுக்குச் செலுத்தும் (அதாவது 2015-16 முதல் 2019-20 வரை).

**7. APY பங்களிப்புத் தொகை எவ்வாறு முதலீடு செய்யப்படுகிறது ?**

மத்திய நிதி அமைச்சகத்தால் பரிந்துரைக்கப்படும் வழிகாட்டுதலின் படி APY திட்டத்தின் பங்களிப்பு தொகை முதலீடு செய்யப்படும்.
APY திட்டமானது இந்திய அரசாங்கம் / PFRDA மூலம் நிர்வகிக்கப்படுகிறது.

**8. அடல் பென்ஷன் கணக்கு துவங்க வழிமுறை என்ன ?**

- ❖ சேமிப்பு கணக்கு வைத்துள்ள வங்கி கிளையை அணுகவும்
- ❖ அடல் பென்ஷன் விண்ணப்பத்தை பூர்த்தி செய்யவும்
- ❖ ஆதார் எண் / மொபைல் எண்ணை கொடுக்கவும்
- ❖ மாத தவணைக்கான தொகையை வங்கி கணக்கில் வைத்து இருக்கவும்

**9. அடல் பென்ஷன் திட்டத்தில் சேருவதற்கு ஆதார் எண் கட்டாயமா ?**

அடல் பென்ஷன் கணக்கு துவங்க ஆதார் எண் கட்டாயம் இல்லை . எனினும், நீண்ட கால ஓய்வூதிய உரிமைகள், மற்றும் உரிமை தொடர்பான சர்ச்சைகளை தவிர்க்க பயனாளிகளுக்கு , கணவன், மனைவி மற்றும் வாரிசுதாரர்களுக்கு ஆதார் அடையாளம் KYC ஆவணத்தில் இருக்க வேண்டும் .

**10. வங்கி கணக்கு இல்லாமல் அடல் பென்ஷன் கணக்கு துவங்க முடியுமா ?**

இல்லை . அடல் பென்ஷன் கணக்கு துவங்க வங்கி கணக்கு கட்டாயம் தேவை

**11. அடல் பென்ஷன் கணக்கில் பணம் செலுத்தும் முறை என்ன ?**

அனைத்து பங்களிப்புகளை சந்தாதாரர் வங்கி சேமிப்பு கணக்கில் இருந்து ஆட்டோ -டெபிட் வசதி மூலம் மாதந்தோறும் செலுத்தப்படும்.

**12. அடல் பென்ஷன் கணக்கில் மாத தவணை செலுத்தும் தேதி என்ன?**

அடல் பென்ஷன் கணக்கு துவங்கிய தேதியில் மாத தவணை செலுத்தலாம்.

**13. சேமிப்பு கணக்கில் தவணை தொகை செலுத்த போதுமான பணம் இல்லை என்றால் என்ன நடக்கும்.?**

கணக்கில் பணம் இல்லை என்றால் அது குறையாக கருதப்படும். காலம் கடந்து செலுத்தப்படும் தவணைக்கு மேல் கூடுதல் தொகை வங்கியால் வசூலிக்கப்படும். குறிப்பிடப்பட்ட தேதியில் பங்களிப்புக்காக வங்கி சேமிப்பு கணக்கு தேவைப்படும் சமநிலை அல்லாத பராமரிப்பு இயல்பானதாக கருதப்படுகிறது. கூடுதல் தொகையானது ரூபாய் 1 முதல் ரூபாய் 10 வரை வசூலிக்கப்படும்.

- தவணைத்தொகை மாதம் 100 ரூபாய் வரை - ரூபாய் 1
- தவணைத்தொகை மாதம் ரூபாய் 101 முதல் ரூபாய் 500 வரை - ரூபாய் 2
- தவணைத்தொகை மாதம் ரூபாய் 501 முதல் ரூபாய் 1000 வரை - ரூபாய் 5
- தவணைத்தொகை மாதம் ரூபாய் 1001 க்கு மேல் - ரூபாய் 10

தவணைத்தொகை முறையாக செலுத்தத் தவறினால்,

- 6 மாதத்திற்கு பின் கணக்கு முடக்கப்படும்
- 12 மாதத்திற்கு பின் கணக்கு செயலிழக்க செய்யப்படும்
- 24 மாதத்திற்கு பின் கணக்கு முடிக்கப்படும்

சந்தாதாரர் ஆட்டோ - டெபிட் மூலம் தவணை செலுத்த தேவையான தொகையை தன் வங்கி கணக்கில் வைத்திருக்க வேண்டும் .

செலுத்தப்படும் தொகைக்கான வட்டி / கூடுதல் தொகை சந்தாதாரரின் பென்ஷன் கார்பஸ் கணக்கில் வரவு வைக்கப்படும்

**14. எனக்கு ரூபாய் 1000 பென்ஷன் கிடைக்க எவ்வளவு பணம் செலுத்த வேண்டும்?**

| திட்டத்தில் சேரும் வயது | தவணை செலுத்தும் ஆண்டுகள் | மாதத்தவணை |
|---|---|---|
| 18 | 42 | 42 |
| 20 | 40 | 50 |
| 25 | 35 | 76 |
| 30 | 30 | 116 |
| 35 | 25 | 181 |
| 40 | 20 | 291 |

அனைத்து பங்களிப்புகளை சந்தாதாரர் வங்கி சேமிப்பு கணக்கில் இருந்து ஆட்டோ -டெபிட் வசதி மூலம் மாதந்தோறும் செலுத்தப்படும்.

வயது வாரியான தவணை தொகையை அறிய ( **இணைப்பு 1 பார்க்கவும்**

**15. அடல் பென்ஷன் திட்டத்தில் சேரும் போது வாரிசு விவரங்களை தெரிவிக்க வேண்டுமா ?**

ஆம். அடல் பென்ஷன் திட்டத்தில் சேர வாரிசு விவரங்களை கட்டாயம் தெரிவிக்க வேண்டும். கணவன் / மனைவி குறித்த விவரங்களை கட்டாயம் தெரிவிக்க வேண்டும். அவர்களின் ஆதார் எண்ணையும் தெரிவிக்க வேண்டும்.

**16. என்னால் எத்தனை அடல் பென்ஷன் கணக்கு தொடங்க இயலும்?**

ஒருவர் ஒரு அடல் பென்ஷன் கணக்கு மட்டுமே தொடங்க இயலும்.

**17. சந்தாதாரர் பென்ஷன் தொகையை கூட்ட அல்லது குறைக்க வேண்டி மாதத் தவணையை கூட்ட அல்லது குறைக்க முடியுமா ?**

சந்தாதாரர் தவணை செலுத்தும் காலத்தில் பென்ஷன் தொகையை கூட்ட அல்லது குறைக்க முடியும். இந்த தவணைத்தொகை மாற்றம் வருடத்தில் ஒரு முறை ஏப்ரல் மாதத்தில் செய்யலாம்.

**18. அடல் பென்ஷன் திட்டத்தில் இருந்து வெளியேறும் முறை என்ன ?**

**அ. 60 வயது பூர்த்தி ஆகும் போது .**

இந்த வயதில் பென்ஷன் திட்டத்தில் இருந்து வெளியேறி மாத பென்ஷன் பெற துவங்கலாம்.

**ஆ சந்தாதாரர் ஏதேனும் ஒரு காரணத்தால் இறக்கும் போது**

சந்தாதாரர் இறந்த பின் அவரது கணவன்/ மனைவிக்கு பென்ஷன் வழங்கப்படும் . இருவரும் இறந்த பின் அவர்களது வாரிசுக்கு பென்ஷன் கார்பஸ் தொகை வழங்கப்படும்.

**இ. திட்டத்தில் இருந்து 60 வயதிற்கு முன்னால் வெளியேறும் போது**

60 வயதிற்கு முன்னால் திட்டத்தில் இருந்து வெளியேறுவது என்பது தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் மட்டுமே அனுமதிக்கப்படும் . அதாவது சந்தாதாரர் இறந்த பின் அல்லது கடுமையாக நோய்வாய் படும் போது

**19. நான் செலுத்திய தொகை குறித்த விவரங்களை எப்படி தெரிந்து கொள்வது ?**

சந்தாதாரர் செலுத்திய தொகை குறித்த விவரங்களை அவரது பதிவு செய்யப்பட்ட மொபைல் எண்ணுக்கு குறுஞ்செய்தி மூலம் தெரிவிக்கப்படும். சந்தாதரருக்கு கணக்கு அறிக்கையும் குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு முறை வழங்கப்படும்.

20. **நான் APY பண பரிவர்த்தனை குறித்த அறிக்கை பெற முடியுமா ?**

ஆம். APY கணக்கு அறிக்கை கால இடைவெளிகளில் சந்தாதாரர்கள் வழங்கப்படும்.

**21. நான் எனது வீடு / நகரம் மாறினால் எவ்வாறு எனது பங்களிப்பை செலுத்த முடியும் ?**
பங்களிப்பு தொகை ஆட்டோ டெபிட் மூலம் பெறப்படுவதால் எங்கிருந்து வேண்டுமானாலும் பங்களிப்புத் தொகையை செலுத்தலாம் .

**22. தற்போதுள்ள SWAVALAMBAN திட்டத்தின் பயனாளிகளுக்கு என்ன ஆகும் ?**

- தற்போதுள்ள தகுதியான (18 முதல் 40 வயதிற்குள் ) SWAVALAMBAN சந்தாதாரர்கள் அவர்கள் விரும்பினால் புதிய APY திட்டத்திற்கு மாற்றப்படுவார்கள். எனினும், அரசாங்கத்தின் இணை பங்களிப்பு, SWAVALAMBAN திட்டத்தினைப் பொறுத்து அமையும்.அதாவது SWAVALAMBAN திட்டத்தின் பயனாளி அரசின் பங்களிப்பை 1 வருடத்திற்கு பெற்றுள்ளார் எனில் APY திட்டத்தின் கீழ் இணை பங்களிப்பு 4 ஆண்டுகள் கிடைக்கும். தற்போதுள்ள தகுதியான பயனாளிகள் APY திட்டத்தில் இருந்து விலகுவதாக இருந்தால் அரசாங்கத்தின் பங்களிப்பு 2016-17 வரை இருக்கும். மேலும் தகுதியான வயது முடியும் வரை NPS SWAVALAMBAN திட்டம் அவர்களுக்கு செயல்படுத்தப்படும்
- 40 வயதிற்கு மேற்பட்ட பிற சந்தாதாரர்கள் தாங்கள் விரும்பினால் மொத்தத் தொகையை பெற்றுக் கொண்டு வெளியேறலாம்
- 40 வயதிற்கு மேற்பட்ட சந்தாதாரர்கள் விரும்பினால் 60 வயது வரை திட்டத்தில் தொடரலாம்.
- தற்போதுள்ள சந்தாதாரர்கள் தானாகவே APY திட்டத்தின் கீழ் மாற்றப்படுவார்கள் .

**தோராயமான பங்களிப்பு கணக்கீடு (வயது வாரியாக) இணைப்பு -1**

| சேரும் வயது | பங்களிப்பு வருடங்கள் | மாதாந்திர ஓய்வூதியம் ரூ 1000 | மாதாந்திர ஓய்வூதியம் ரூ 2000 | மாதாந்திர ஓய்வூதியம் ரூ 3000 | மாதாந்திர ஓய்வூதியம் ரூ 4000 | மாதாந்திர ஓய்வூதியம் ரூ 5000 |
|---|---|---|---|---|---|---|
| 18 | 42 | 42 | 84 | 126 | 168 | 210 |
| 19 | 41 | 46 | 92 | 138 | 183 | 228 |
| 20 | 40 | 50 | 100 | 150 | 198 | 248 |
| 21 | 39 | 54 | 108 | 162 | 215 | 269 |
| 22 | 38 | 59 | 117 | 177 | 234 | 292 |
| 23 | 37 | 64 | 127 | 192 | 254 | 318 |
| 24 | 36 | 70 | 139 | 208 | 277 | 346 |
| 25 | 35 | 76 | 151 | 226 | 301 | 376 |
| 26 | 34 | 82 | 164 | 246 | 327 | 409 |
| 27 | 33 | 90 | 178 | 268 | 356 | 446 |
| 28 | 32 | 97 | 194 | 292 | 388 | 485 |
| 29 | 31 | 106 | 212 | 318 | 423 | 529 |
| 30 | 30 | 116 | 231 | 347 | 462 | 577 |
| 31 | 29 | 126 | 252 | 379 | 504 | 630 |
| 32 | 28 | 138 | 276 | 414 | 551 | 689 |
| 33 | 27 | 151 | 302 | 453 | 602 | 752 |
| 34 | 26 | 165 | 330 | 495 | 659 | 824 |
| 35 | 25 | 181 | 362 | 543 | 722 | 902 |
| 36 | 24 | 198 | 396 | 594 | 792 | 990 |
| 37 | 23 | 218 | 436 | 654 | 870 | 1087 |
| 38 | 22 | 240 | 480 | 720 | 957 | 1196 |
| 39 | 21 | 264 | 528 | 792 | 1054 | 1318 |
| 40 | 20 | 291 | 582 | 873 | 1164 | 1454 |